**OS.No.322/2014 P.W.1-சம்பத்குமார் 19.09.2025**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் 07.10.2011 அன்று பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். ரூபாய் 15 லட்சம் பிரதிவாதிக்கு வங்கி கணக்கு மூலம் செலுத்தியதாக கூறியுள்ளேன். நான் தேவஆசிர்வாதம் என்ற நபருக்கு ரூபாய் 15 லட்சம் கடன் கொடுத்து அதை திரும்ப பெறுவதற்காக காசோலை வழக்கு ஒன்றை தாம்பரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கின்போது மேற்படி தேவஆசிர்வாதத்திற்கு நான் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். என் முன் காட்டப்படும் அறிவிப்பு தான் நான் தேவஆசிர்வாதத்திற்கு அனுப்பிய அறிவிப்பா என்றால் அறிவிப்பு தெளிவாக இல்லை. நான் தாம்பரம் குற்றவியில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த தனி புகாரின் நகல் என்முன் காட்டப்படுவதுதான் என்றால் சரிதான். அது பி.சா.ஆ.1. மேற்படி புகாரில் நான் தேவஆசிர்வாதத்திற்கு 11.10.2011 அன்று ரூபாய் 5 லட்சமும், 20.10.2011 அன்று ரூபாய் 10 லட்சமும் கொடுத்ததாக பி.சா.ஆ.1-ல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அவருக்கு ரூபாய் 15 லட்சம் கடன் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அவருக்கு நான் ரூபாய் 15 லட்சத்தையும் ரொக்கமாக கொடுத்தேன் என்றால் சரிதான். நகையை அடகு வைத்து கொடுத்தேன். நகையை அடமானம் வைத்ததை காட்டும் ஆவணங்களை நான் தாக்கல் செய்யமுடியுமா என்றால் நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் முடியாது. பி.சா.ஆ.1-புகாரில் நகையை அடகு வைத்து பணம் கொடுத்ததாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். நான் நகையை அடகு வைத்து பணத்தை கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி தனி புகார் வழக்கில் தாக்கல் செய்துள்ள முதல் மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியங்களின் வாக்குமூலம் என் முன் காட்டப்படுவது என்றால் சரிதான். அது பி.சா.ஆ.2. பி.சா.ஆ.2-ல் தேவஆசிர்வாதம் அனுப்பிய பதில் அறிவிப்பை அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பு என்முன் காட்டப்படுவது என்றால் சரிதான். அது பி.சா.ஆ.3. மேற்படி பதில் அறிவிப்பில் என்னிடம் ரூபாய் 15 லட்சம் கடன் பெற்றுக்கொண்டதாக தேவஆசிர்வாதம் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், அதனை இவ்வழக்கின் பிரதிவாதியின் வங்கி கணக்கு மூலம் பெற்றுள்ளார் என்று கூறியுள்ளார் என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை. அவ்வாறு பணம்

போடவில்லை. அந்த அறிவிப்பு படி அவ்வாறு நடைபெறவில்லை. நான் இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3-ல் அவ்வாறு இருந்தாலும் அது உண்மையில்லை. தேவஆசிர்வாதத்திற்கு நான் கொடுத்த கடன் ரூபாய் 15 லட்சத்தை வருமான வரி கணக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்த தனி புகாரின் நிலை தற்போது என்னவென்றால் மேற்படி தேவஆசிர்வாதம் தற்கொலை செய்து கொண்டு இறந்துவிட்டதால் வழக்கு முடிந்துவிட்டது. மேற்படி தேவஆசிர்வாதம் மீதும், அவரது மனைவி பியுலா மீதும் தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.235/2014 தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். அந்த வழக்கில் தாக்கல் செய்த வழக்குரையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் என்முன் காட்டப்படுவதுதான் என்றால் சரிதான். அது பி.சா.ஆ.4. 03.10.2011 அன்று ரூபாய் 5 லட்சம் கொடுத்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையாக கொடுத்தேன். அந்த வழக்கும் அவா் தற்கொலை செய்து கொண்டதால் நான் மேல் நடத்தவில்லை. மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை காட்டும் தீர்ப்பாணையின் நகல் இதுதான் என்றால் எனக்கு தள்ளுபடி ஆன விவரம் தெரியாது. தேவஆசிர்வாதத்திற்கு ஒட்டுமொத்தமாக ரூபாய் 20 லட்சம் கடன் கொடுத்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அக்டோபர் 2011ல் எந்த வகையில் நான் ரூபாய் 20 லட்சம் சம்பாதித்தேன் என்றால் நான் சம்பாதித்தேன். வங்கியில் மேல்வரைபற்று (over draft) 40 லட்சம் வரை எடுக்கக்கூடிய வசதி இருந்தது. அது போக என்னிடம் நகைகளும், கையிருப்பு சேமிப்பும் இருந்தது. வழக்குரையில் அவ்வாறு வங்கி மேல்வரைபற்று, நகை, கையிருப்பு சேமிப்பு ஆகியவற்றை வைத்து கொடுத்ததாக வாதுரை செய்துள்ளேனா என்றால் இல்லை. வங்கி மேல்வரைபற்று வசதி எனக்கு இருந்தது என்பதை காட்ட வங்கி கணக்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வங்கி கணக்கு ஆவணத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் அந்த வங்கியை மூடிவிட்டார்கள். 1, 2 கணக்கு பட்டியல் தேடினால் கிடைக்கும். 2011ம் ஆண்டிற்கான கணக்கு பட்டியல் கிடைக்குமா என்றால் தேடி பார்த்தால் கிடைக்கும். 2011-2012ம் ஆண்டிற்கான வருமான வரி கணக்கை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தேடி பார்த்தால் கிடைப்பதற்கு வாய்ப்புண்டு.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**